[14th March 1966

கனம் திரு. கோ. பூவராகன் : பரிசீலனை செய்யப்பட்டு தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : அவர்களுடைய சங்கங்களிலிருந்து ஸ்கேலை அதிகரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்தனவா? பரிசீலனை செய்யப்பட்டதா?

கனம் திரு. கோ. பூவராகன் : கோரிக்கைகள் வந்தன. கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு அதிலே முடிவு எடுப்பது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

'Son Et Lumiere' Programme

* 284 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to extend the programme styled 'Son Et Lumiere' to the historic temples in the State for explaining the history behind those monuments vividly to tourists; and

(*b*) if so, the details thereof ?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) இந்திய அரசாங்கச் சுற்றுப் பயணத் துறையினரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய சுற்றுப்பயண கூட்டு நிறுவனம் மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோயிலில் "சான்-ஏ-லூமியர்" எனப்படும் கலை நிகழ்ச்சியை நடத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது.

(இ) அதற்கான ஏற்பாடுகள் இந்திய சுற்றுப் பயணக் கூட்டு நிறுவனத்தினால் வகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. வை. சங்கரன் : அந்தக் கலை நிகழ்ச்சியானது புதிதாகவும் முற்றிலும் வினோதமாகவும் இருப்பதால் அது என்ன மாதிரி காண்பிக்கப்படுகின்றன? ஒலி ஒளி இரண்டும் கலந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. கோ. பூவராகன் : இது பெரும்பாலும் சரித்திர, கலாசார முக்கியத்துவம் பெற்ற புராதன இடங்களைப் பற்றியதாக இருக்கும். அந்த மாதிரி இடங்களில் முன்கூட்டியே ஒலி, ஒளி அமைப்புகளுடன், முன்பு எவ்வாறு நடந்திருக்கும் என்பதை இப்போது நடப்பது போல் காட்டுகிற நிகழ்ச்சி. பேச்சும் விளக்கமும் அதற்குத் தகுந்தவாறு அமைக்கப்பட்டிருக்கும்.

'பஸ்' நிலையம், சிதம்பரம்

* 285 கேள்வி.—**திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், சிதம்பரம் நகரசபை மூலம் சிதம்பரத்தில் இரண்டாவது பஸ் ஸ்டாண்டு கட்ட வேண்டுமென்று கோரி அரசாங்கத்திற்கு மனுக்கள் ஏதேனும் அண்மையில் வந்துள்ளனவா?

11th March 1966]

(இ) ஆம் எனில், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சிவசுப்பிரமணியன் : சிதம்பரத்தில் ஜனநெருக்கம் அதிகமாக இருப்பதாலும், வளர்ந்து வரும் நிலையில் இருப்பதாலும் அங்கு இரண்டாவது பஸ் ஸ்டாண்டை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இந்த மாதிரி இன்னொரு பஸ் ஸ்டாண்டு வேண்டுமென்பதற்காக ஒரு கவுன்சிலர் தீர்மானம் கொண்டுவந்து அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. சிதம்பரம் டவுனில் அநேகமாகக் காலி இடம் கிடைப்பதில்லை. பெரும்பாலும் கோயிலுக்குச் சொந்தமான இடங்களாகத்தான் இருக்கின்றன. புறம்போக்கு நிலம் அநேகமாகக் கிடையாது என்று சொல்லலாம். அங்கு இருக்கிற லாரி ஸ்டாண்டு ஒன்றில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான சாமான்களைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அந்தக் காலி இடம் இந்த பஸ் ஸ்டாண்டுக்காகக் கிடைக்கும் நிலைமை ஏற்பட்டால் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.

திரு. கே. ஏ. மதியழகன் : அமைச்சர் அவர்கள் சிதம்பரத்திற்கு வந்திருந்தபோது கொடுத்த வரவேற்பில், சென்ற ஆண்டு கொடுத்ததில் குறிப்பிட்டிருக்கிறார்கள் இது பற்றி. நேற்றுக் கூட போய் வந்தார்கள். இதற்கான திட்டம் விரைவுபடுத்தப்படும் என்று உறுதிமொழி அளிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சம்பந்தப்பட்ட சாமான்கள் அந்த இடத்திலிருந்து காலி செய்யப்பட வேண்டும். புதை வடிகால் திட்டம் 1967-68-ல் முடிவடையும் என்று சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பின்னால்தான் இதைக் கவனிக்க முடியும்.

Panchayat Elections

* 286 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether Police bandobust was arranged for holding panchayat elections of Moongilpadi Panchayat at Senai Goundanur village (Omalur Block, Salem district);

(*b*) whether complaints from the elected members that they were obstructed from attending the meeting by show of force, by a rival group was received by the Police; and

(*c*) whether any case has been registered in this connection?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை